Before the Chief Judicial Magistrate Cum Spl., Judge Court, Nagercoil

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8082856

C

1. District : மாவட்டம் கன்னியாகுமரி PS காவல்நிலையம் VAC, கன்னியாகுமரி பிரிவு Year: ஆண்டு 2023 FIR No.: முதஅ எண் 6/2023 Date நாள் 12.10.2023
2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: Sec - 7(a)
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 10.10.2023 ம் தேதி காலை 11.30 மணி மற்றும் 11.10.2023 ம் தேதி பிற்பகல் சுமார் 12.30 மணி
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.10.2023 Time நேரம் காலை 09.15 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.10.2023 Time நேரம் காலை 09.15 மணி
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 15 கி.மீ மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கல்குளம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அலுவலக அறை.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இககாவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி. S. ஜெகதீஸ்வரி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் W/o. திரு. செல்வகுமார்,
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42 வயது (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் குடும்பத்தலைவி (g) Address : முகவரி பள்ளிச்சன்விளை, கண்டன்விளை (PO) கன்னியாகுமரி மாவட்டம்.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. ருக்குமணி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கல்குளம் வட்டாட்சியர் அலுவலகம்
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

இல்லை

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளா / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 12-10-2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10.30 மணி

Name: பெயர் C. சிவசங்கரி
Rank: நிலை ............No எண்
VAO, களியனூர்

**Attachment to Column No.12 of First Information Report in Kanyakumari Vigilance and Anti-Corruption, Cr.No.6/2023.**

| |
|---|
| எதிரி:<br><br>திருமதி.ருக்குமணி,<br>தலைமையிடத்து<br>துணை வட்டாட்சியர்,<br>கல்குளம்வட்டாட்சியர்<br>அலுவலகம்,<br>கன்னியாகுமரி மாவட்டம். |

பணிந்து சமர்ப்பிக்கிறேன்:-

நான் (C.சிவசங்கரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கன்னியாகுமரி பிரிவு) இன்று 12.10.2023-மதேதி காலை 09.15 மணிக்கு அலுவலகத்தில் அலுவலில் இருந்தபோது திருமதி.S.ஜெகதீஸ்வரி, W/o.திரு.S.செல்வகுமார், கதவு எண்.2-40F/11, SJ இல்லம், பள்ளிச்சன்விளை,கண்டன்விளை (P.O) கன்னியாகுமரி மாவட்டம் என்பவர் அலுவலகத்தில் என் முன் ஆஜராகி எழுத்து மூலம் கொடுத்த புகார் மனுவை நான் பெற்று, மேற்படி புகார் மனுவில் உள்ள எதிரி திருமதி.ருக்குமணி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மற்றும் வாதி திருமதி.S.ஜெகதீஸ்வரி ஆகியோரின் முன் நடத்தை குறித்து எனது ரகசிய தொடர்பாளர்கள் மூலம் விசாரித்தும், மேற்படி புகார் மனு குறித்து காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தகவல் தெரிவித்து வாய்மொழி அனுமதி பெற்றும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கன்னியாகுமரி பிரிவு குற்ற எண்.6/2023, சட்டப்பிரிவு 7(a) of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 –ன்படி 12.10.2023-மதேதி காலை 09.45 மணிக்கு வழக்கு பதிவு செய்கிறேன். புகார் மனு பின்வருமாறு:- அனுப்புநர், திருமதி.S.ஜெகதீஸ்வரி, W/o.திரு.S.செல்வகுமார், D.No.2-40F/11, SJ இல்லம், பள்ளிச்சன்விளை, கண்டன்விளை (P.O), கன்னியாகுமரி மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, நாகர்கோவில். ஐயா, நான் கன்னியாகுமரி மாவட்டம், பள்ளிச்சன்விளை, கண்டன்விளை என்ற முகவரியில் வசித்து வருகின்றேன். எனது கணவர் BSF-ல் பணிபுரிந்து வருகின்றார். நான் House Wife ஆக உள்ளேன். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு அக்கா மற்றும் 3 அண்ணன்கள் ஆகியோர்கள் ஆவார்கள். இதில் எனது அக்கா ராஜேஸ்வரியின் மகன் J.ராகுல்

என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவண எண்.4528/2021-ன்படி கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கக்கோட்டுத்தலை கிராமம், புலஎண்.778/5B-ல் உள்ள 0.02.64 ஹெக்டேர்/ஏர் கொண்ட நன்செய் நிலம் உள்ளது. மேற்படி ராகுலின் பெயரில் தனிபட்டாவாக அமைந்துள்ள ஏழு சென்ட் நன்செய் நிலத்தில் வீடு கட்டுவதற்கு, மேற்படி இடத்திற்கு வேளாண்மை அல்லாத பயன்பாடு என்பதற்கான தடையில்லா சான்று தேவைப்படுவதாக என்னிடம் கூறினான். எனவே நான் இதுசம்மந்தமாக கடந்த 05.07.2023-ம் தேதி நாகர்கோவிலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அவனை அழைத்துச் சென்று மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்க செய்தேன். எனது அக்காவின் மகன் ராகுல் தினகூலியாக வெல்டிங் வேலைக்கு செல்வதால், தடையில்லா சான்று பெற தான் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனு சம்மந்தமாக என்னை தொடர்ந்து விசாரிக்க சொன்னான். நான் விசாரித்தபோது, இந்த மனு கோப்பானது, விசாரணை முடித்து, பரிந்துரை செய்ய வேண்டி, கல்குளம் தாசில்தார் அலுவலகத்தில் இருப்பதாக தெரிந்து, நான் 10.10.2023-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு, தக்கலையில் உள்ள கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.ருக்குமணி அவர்களை, அவரது கண்ணாடி அறையில் சந்தித்து, எனது சகோதரியின் மகன் ராகுலின் வீடுகட்ட தேவையான தடையில்லா சான்று பற்றி கேட்டேன். அதற்கு அவர் மேற்படி கோப்பில் நடவடிக்கை எடுக்க தனக்கு ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம்) கொடுத்தால் மட்டுமே தடையில்லா சான்று கிடைக்க வேண்டி பரிந்துரை செய்ய தான் நடவடிக்கை எடுப்பேன் என்று கூறிவிட்டார். இதனை நான் ராகுலிடம் கூறியபோது அவன் நானே தினக்கூலியாக வெல்டிங் வேலை செய்கிறேன், இவ்வளவு பணத்துக்கு எங்கே போவது என்று வருத்தப்பட்டு, என்னிடம் மீண்டும் ஒரு தடவை சென்று கேட்டுபார்க்கும்படி கூறினான். அதன்படி நான் நேற்று 11.10.2023-ம்தேதி சுமார் 12.30 மணிக்கு கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.ருக்குமணி அவர்களை, அவரது கண்ணாடி அறையில் சந்தித்து, மேற்படி தடையில்லா சான்று பற்றி கேட்டதற்கு, ஏற்கனவே தான் கேட்ட பணம் கொடுத்தால் மட்டுமே, தடையில்லா சான்றுக்கு பரிந்துரை செய்வேன் என்று கூறினார். அதற்கு நான், எனது அக்கா மகன் தினக்கூலியாக வெல்டிங் வேலை செய்வதால் அவ்வளவு பணம்

அவனால் கொடுக்க முடியாது, நான் தான் அவனுக்காக தடையில்லா சான்று வேண்டி அலைகிறேன் என்று கூறினேன். அதற்கு தலைமையிடத்து துணை வட்டாட்சியா திருமதி.ருக்குமணி அவர்கள், உங்களுக்காக ரூ.5,000/- குறைத்து கொள்கின்றேன் என்று கூறி, ரூ.25,000/-ஐ (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம்) நாளை 12.10.2023-ம்தேதி தன்னிடம் கொடுக்க வேண்டுமென்றும், கொடுத்தால் மட்டுமே பரிந்துரை செய்து கோப்பை நடவடிக்கைக்கு அனுப்புவதாக கண்டிப்பாக கூறிவிட்டார். அரசு சம்பளம் பெறும் அரசு ஊழியரான துணை வட்டாட்சியர், தன்னுடைய அரசு வேலையை செய்ய லஞ்சம் கேட்டதால், எனக்கு லஞ்சம் கொடுத்து தடையில்லா சான்று பெற விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.ருக்குமணி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடிவு செய்து, ராகுலிடம் இந்த விபரத்தை சொன்னேன். அவனும் என்னுடைய முடிவை ஏற்றுக்கொண்டு ருக்குமணி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க சொன்னான். ஆகவே நான் ஒரு புகார் மனுவை எழுதி, என்னிடம் லஞ்சம் கேட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.ருக்குமணி மீது சட்டபடியான நடவடிக்கை எடுக்க, ராகுல் தந்த ரூ.10,000/- மற்றும் நான் சேமித்து வைத்திருந்த ரூ.15,000/- ஆக மொத்தம் ரூ.25,000/- உடன் வந்து, இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். நடவடிக்கை எடுக்குமபடி கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள sd/- 12.10.2023 (S.Jagatheeswari). Sir, Received the complaint on 12.10.2023 at 09.15 hrs and registered a case in Kanyakumari V&AC Cr.No.6/2023 U/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 09.45 hrs sd-12.10.2023 (C.சிவசங்கரி, காவல் ஆய்வாளர், V&AC, கன்னியாகுமரி பிரிவு.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகார் மனுவுடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி, கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

12/10/2023

(C-சிவசங்கரி)